


மதுரை மாவட்டம் பாலமேட்டில் வருகிற 16ஆம் தேதி நடைபெற உள்ள உலக புகழ்பெற்ற தமிழர்களின் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடுகளுக்கான கால்கோல் ஊண்டும் விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவிற்கான பணிகளை துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், மனோகரவேல் பாண்டியன், சுமதி பாண்டியராஜன், பிரபு, ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், தன்ராஜ், முத்தையன், வாடிப்பட்டி பால்பாண்டியன், பால ராஜேந்திரன் மற்றும் பாலமேடு பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகள், கிராம பொதுமக்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி கிளை இளைஞர் அமைப்பாளர்கள் மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நிர்வாகி சந்திப்பு கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்ச் செல்வன் எம்.பி. தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர் கஜேந்திரன் பிரபு, போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ். லட்சுமணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான், வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜ மார்த்தாண்டம் , வேலூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஷ்வா மற்றும் போடி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் இராமநாதபுரம் முகவையூரணி வடக்கு தெரு 2 வது வார்டில் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடை கட்டிடத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், உடன் திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் கருமாணிக்கம், நகர் மன்ற தலைவர்கள் ஆர்.கே.கார்மேகம்,துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் ராமவன்னி, செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், உட்பட கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ வழிகாட்டுதலின் படி (5.1.2026) அன்று நெல்லை மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் நெல்லை மண்டல தலைவர் செ.மகேஸ்வரி ஏற்பாட்டில் மதியம் 12. 30 மணி அளவில் நெல்லை டவுண் உழவர் சந்தை வளாகத்தில் உள்ள முதியோர் காப்பகத்திலும் மற்றும் அரசு மருத்துவமனை மனநல காப்பகத்திலும் நடைபெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி உணவு வழங்கினார்.நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் அனார்கலி,ஜுலியட், மகளிரணி நிர்வாகிகள் பத்மா,மேரி, மேகலா,ஜோதிப்ரியா,வள்ளியம்மாள், கிருஷ்ணவேணி, பூங்கணி,நெல்லை பகுதி துணை செயலாளர் பாபா மூக்கையா,நெல்லையப்பன், சந்திரன்,பேட்டை செல்வம், ஷாகின் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியம் பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் மாவட்ட அளவிலான மாபெரும் கபடி போட்டி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மகாராஜன் எம்.எல்.ஏ., மாவட்டத் துணை செயலாளர் செந்தில், கிழக்கு ஒன்றிய செயலாளர. ராஜாராம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சேது ராஜா, கிழக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்த்திகேயன், மேற்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மலைச்சாமி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



உலகம் உங்க கையில் என்கிற மகத்தான திட்டத்தின் மூலம் 10லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அந்தவகையில் இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு மாணவிகளுக்கு இலவச மடிக்கணினியை வழங்கினார் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சி தலைவர் கல்லூரி முதல்வர், நகர் மன்ற தலைவர், துணை தலைவர், மக்கள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா,ம.தி.தா.இந்து கல்லூரி,சங்கர் பாலிடெக்னிக் கல்லூரி,அரசு தொழில்நுட்ப கல்லூரி ஆகிய 4 கல்லூரிகளின் சார்பில் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி கலையரங்கில் 1875 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வு கல்லூரி தாளாளர் ஹாஜி த.இ.செ.பத்ஹுர் ரப்பானி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் சே.மு.அப்துல்காதர் வரவேற்றார்.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.பங்கேற்று மடிக்கணினி வழங்கினார்.நிகழ்வில் ம.தி.தா.இந்து கல்லூரி முதல்வர் பேராசிரியர் பாலசுப்ரமணியன்,அரசு தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் மார்ஜெரி தியோடர்,நெல்லை அரசு சட்டக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ரஞ்சித் சிங் உள்பட கல்லூரி பேராசிரியர்கள் மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 100மாணவிகளுக்கு உலகம் உங்கள் கையில் மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் நடைபெற்ற விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் மடிக்கணினி வழங்கினார். நிகழ்வில் கல்லூரி முதல்வர் பேபி லதா, கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக் கண்ணன், எட்டயபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி, கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி தெற்கு நகரம் மற்றும் அபிராம் பேரூர் வார்டு மற்றும் பாக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பட்டியலை கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வசம் நகர செயலாளர் சேதுகருணாநிதி பேரூர் செயலாளர் ஜாகீர் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சன்.சம்பத் நகர இளைஞர் அணி அமைப்பாளர் துரைமுருகன் ஆகியோர் படிவங்களை வழங்கினர்.